முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி
முன்னிலை–திரு.பி.ராஜவேல், பி.எஸ்சி., பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி, தென்காசி
2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ம் நாள் புதன்கிழமை
I.A.No.15/2025 in O.S.No.36/2024
*****************

1. செல்வம்

2. கிருஷ்ணகுமாரி ...1, 2 மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சுந்தரி
2. முருகலெட்சுமி ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

இந்த மனுவானது 20.01.2026–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.செந்தில்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அய்யப்பன் அவர்களும் முன்னிலையாகியும், நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் பரிசீலனையிலிருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உ த்தரவு**

1-ம் மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கும், 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் வாதிக்கும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு மருத்துவமனையில் மரபணு பரிசோதனை செய்யும் வகைக்கு நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பு மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட அபிடவிட்டின் சுருக்கம்**

அசல் வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தற்போது பிரதிவாதி தரப்பு

குறுக்குவிசாரணைக்காக வாய்தா போடப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கில், மனுதாரர்கள் தரப்பில், 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் வாதி மனுதாரர்களின் சகோதரரான சண்முகசுந்தரத்தை திருமணம் செய்து கொள்ளாத நிலையில், சண்முகசுந்தரத்திற்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ள சங்கதிகளை ஆட்சேபித்து எதிர்கட்சி செய்து வருகின்றனர். மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் 1–ம் எதிர்மனுதாரரை குறுக்குவிசாரணை செய்யும்போது சண்முக சுந்தரத்திற்கும், 1–ம் வாதிக்கும் திருமணம் நடந்ததற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா? என்று கேட்டதற்கு தாக்கல் செய்யவில்லை என்றும், தாய்மையடைந்த நிலையில் எந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றீர்கள் என்று கேட்டதற்கு எந்த மருத்துவரிடமும் சிகிச்சை பெறவில்லை என்றும், திருமணம் நடைபெற்றபோது உடனிருந்தவர் யார் என்று கேட்டதற்கு, இசக்கி என்றும், ஆனால் மேற்படி இசக்கி என்பவருக்கு எந்த ஊர் என்றே தெரியாது என்றும், குழந்தை பிறப்பதற்கு நாட்டு வைத்திய முறையில் கமலா என்பவர் மருத்துவம் பார்த்ததாகவும், அவர் இறந்துவிட்டார் என்றும் பதிலளித்துள்ளார். 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் வாதிக்கும், இறந்துபோன சண்முகசுந்தரத்திற்கும் திருமணம் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாத நிலையில், 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் வாதிக்கும், இறந்துபோன சண்முகசுந்தரத்திற்கும் தான் இந்நிர் 2–ம் வாதி பிறந்தாரா, இல்லையா, என்ற உண்மை தன்மையை வெளிக்கொணரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, இறந்துபோன சண்முகசுந்தரத்தின் உடன் பிறந்த சகோதரரான 1–ம் மனுதாரர்/2–ம் பிரதிவாதியையும், 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் வாதியையும் மரபணு மருத்துவ பரிசோதனை செய்தால்தான், 2–ம் வாதியின் தந்தை வழி மூதாதையார் யார் என்ற விபரத்தை வெளிக்கொண்டு வர இயலும். எனவே, நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து, அவரது உதவியுடன் மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை பெற வேண்டியது மிகவும் அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களுக்கு

எந்தவித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, இம்மனுவை அனுமதிக்கவேண்டும்.

3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்–**

மனுவில் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய்யானவைகளாகும். மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்களை மனுதாரரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். இம்மனுவானது புதிய வழக்கு மூலத்தை உருவாக்கும் நோக்குடனும், சாட்சியங்களை சேகரிக்கும் எண்ணத்துடனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து வழக்குகளிலும் வழக்கமான முறையில் மரபணு சோதனைக்கு உட்படுத்த இயலாது. யாரையும் கட்டாயப்படுத்தி மரபணு சோதனைக்கு உட்படுத்த இயலாது. அதாவது ஒரு கணவன் தன் மனைவியை கூட மரபணு சோதனைக்கு கட்டாயப்படுத்தி உட்படுத்த இயலாது. இது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்ற Goutam Kundu Vs. State of West Bengal (1993) 3 SCC 418 என்ற வழக்கில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மரபணு சோதனைக்கு உட்படுத்தவேண்டுமெனில், வழக்கில் வலுவான முதல்நிலை நோக்கு இருக்கவேண்டும், சந்தேகத்தின் அடிப்படையில் மரபணு சோதனைக்கு உட்படுத்துமாறு கோர இயலாது. இம்மனுவில் முதல்நிலை நோக்கு வெளிக்கொணரப்படவில்லை. ஆவணங்களில் எவ்வித முரண்பாடுகளும் காணப்படவில்லை. இம்மனுவில் உள்ளார்ந்த சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. எனவே, இம்மனு நிலைக்கத்தக்கதில்லை. இம்மனு சங்கதிகள் குறித்து வாதிகளின் வழக்குரையில் எதுவும் கூறப்படாத நிலையில், மரபணு சோதனைக்கு உத்தரவிட இயலாது. மரபணு சோதனைக்கு உட்படுத்தினால், நிரந்தர களங்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. வாதிகளின் வழக்கை காலதாமதப்படுத்தும் எண்ணத்தோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தாக்கல் செய்துள்ள உரிமையியல் வழக்கிற்கு மரபணு சோதனை அவசியமற்றது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

"மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா?" என்பதேயாகும்.

5. இம்மனுவில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை–</u>

1-ம் மனுதாரர் இறந்துபோன சண்முகசுந்தரம் என்பவரின் சகோதரர் ஆவார். எதிர்மனுதாரர்கள் முறையே இறந்துபோன சண்முக சுந்தரத்தின் மனைவி மற்றும் மகள் என்றும், இறந்துபோன சண்முக சுந்தரத்தின் சொத்துக்களில் தங்களுக்கு பாகம் வேண்டுமென்றும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி இறந்துபோன சண்முக சுந்தரம், 1-ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்தாரா? இறந்துபோன சண்முக சுந்தரம் மற்றும் 1-ம் எதிர்மனுதாரருக்கு 2-ம் எதிர்மனுதாரர் முருகலெட்சுமி மகள் என்பது சரியா? என்பது அசல் வழக்கில் முதன்மை பிரச்சனையாகவும், இறந்துபோன சண்முக சுந்தரத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் சட்டப்பூர்வமான மனைவியா? என்பதும், 2-ம் எதிர்மனுதாரர் குருதிவழி தொடர்புடைய மகளா? என்பதும் வழக்கில் தீர்வு காணவேண்டியதாக உள்ளது. இந்நிலையில், 2-ம் எதிர்மனுதாரர் இறந்துபோன சண்முக சுந்தரத்தின் மூலம் 1-ம் மனுதாரருக்கு குழந்தையாக பிறந்தவரா? என்பது குறித்து ஆராய 2-ம் எதிர்மனுதாரரை மரபணு சோதனைக்கு உட்படுத்தவேண்டுமென்றும், அவ்வாறு மரபணு சோதனைக்கு உட்படுத்தும்போது 2-ம் எதிர்மனுதாரர் சண்முக சுந்தரம் மூலம் பிறந்தவரா? இல்லையா? என்பதை ஆராய முடியும் என்றும், 1-ம் மனுதாரர் மற்றும் 2-ம் எதிர்மனுதாரரை மரபணு சோதனைக்கு உட்படுத்தி அறிக்கை பெறுவது வழக்கின் தீர்வுக்கு அவசியமானது என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. ஒரு வழக்கை தாக்கல் செய்த நபரே தனது வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர். குறிப்பிட்ட பொருண்மையை தனது வாதமாக முன் வைக்கும் நபர் (வாதி அல்லது பிரதிவாதி) அத்தகைய பொருண்மையை நிரூபிக்க

கடமைப்பட்டவராவார். இந்த வழக்கில் 1-ம் எதிர்மனுதாரர் இறந்துபோன சண்முகசுந்தரம் தனது கணவர் என்றும், சண்முக சுந்தரத்திற்கும் தனக்கும் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றதாகவும், சண்முக சுந்தரத்தின் மூலம் 2-ம் எதிர்மனுதாரர் பிறந்தார் என்றும், அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தரப்பில் (பிரதிவாதிகள் தரப்பில்) சண்முக சுந்தரம் அனுசுயா என்பவரை முதலில் திருமணம் செய்திருந்தார் என்றும், பின்னர் இருவரும் பிரிந்துவிட்ட நிலையில், சண்முக சுந்தரம் வேறு எவரையும் திருமணம் செய்துகொள்ளாமல் தனிமையில் வாழ்ந்து இறந்துபோனார் என்றும், எனவே, மனுதாரர் மற்றும் அவரது சகோதரர்கள் மட்டுமே சண்முக சுந்தரத்தின் வாரிசுகள் என்பதால், வாதி கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டு வருகிறது.

8. எனவே, முதலில் எதிர்மனுதாரர்கள் சண்முக சுந்தரத்தின் மனைவி என்பதும், மகள் என்பதும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்ட பின்னர் சண்முக சுந்தரம் அனுசுயா என்பவரை திருமணம் செய்திருந்தாரா? அனுசுயா என்பவருக்கும், சண்முக சுந்தரத்திற்கும் திருமணம் நடந்திருந்ததா? அந்த திருமணம் இந்து திருமண சட்டத்தின்படி மண விலக்கு ஏற்பட்டுள்ளதா? சண்முக சுந்தரத்திற்கு மனுதாரரும், இறந்துபோன ஈஸ்வரன் என்பவரும் வாரிசுகளா? அல்லது அனுசுயா என்பவர் வாரிசா? அனுசுயா மூலம் சண்முக சுந்தரத்திற்கு குழந்தைகள் ஏதும் உள்ளனரா? போன்ற சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். எனவே, நிரூபிக்கும் சுமை எவரிடம் உள்ளது என்பது ஒருபுறம் இருக்க, வாதிகள் நிரூபணம் செய்யவேண்டிய பொருண்மைகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது அல்லது நிரூபணம் செய்யவில்லை என்று மட்டுமே மறுத்துக் கூறவேண்டிய மனுதாரர், வாதியின் வழக்கை மறுதலிக்கும் விதமாக மரபணு சோதனைக்கு உட்படுத்தவேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்துள்ளது பொருத்தமற்றதாகும்.

9. ஒருவரை மரபணு சோதனைக்கு உட்படுத்தவேண்டுமென்று வலியுறுத்த இயலாது. மரபணு சோதனை என்பது தனி நபரின் உரிமையாகும். தன்னுடைய

தந்தை யார் என்பது குறித்தோ, தனக்கு பிறந்த குழந்தை யார் மூலம் பிறந்தது என்பது குறித்தோ தெரிவிக்கவேண்டிய நபர்கள் அது பற்றிய விவரங்கள் பொது வெளியில் கூறவேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மேலும், அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ள நடைமுறை காலத்தில் செயற்கை முறை கருத்தரித்தல், சோதனை குழாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளுதல், உயிரணுக்கள் தானம் தருவது போன்றவை நடைமுறையில் உள்ளது. எனவே, மரபணு சோதனை மூலமாக மட்டுமே ஒருவரின் பிறப்பை உறுதி செய்ய இயலாது. எனவே, 2-ம் எதிர்மனுதாரரின் பிறப்பை உறுதி செய்யவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக எதிர்மனுதாரர்களை மரபணு சோதனைக்கு வற்புறுத்த இயலாது என்பதால், இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று நான் தீர்மானிக்கிறேன்.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ம் நாளன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALUCHAMY RAJAVEL Digitally signed by BALUCHAMY RAJAVEL Date: 2026.02.02 17:51:36 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தென்காசி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்–** இல்லை.

BALUCHAMY RAJAVEL Digitally signed by BALUCHAMY RAJAVEL Date: 2026.02.02 17:52:01 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தென்காசி.

*****************************************************

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி
**I.A.No.15/2025 in O.S.36/2024**
உத்தரவு
நாள்– **21.01.2026**

*****************************************************